குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்.

முன்னிலை: திரு. சா. வரதராஜன், பி.ஏ.,பி.எல்.,

நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 06 ம் நாள் செவ்வாய்கிழமை

STC No. 1322/2025

(BNSS பிரிவு 351(1)(ஆ)–ன் படியான விசாரணை)

எதிரி– மாரீஸ்வரி,

| | | | |
|---|---|---|---|
| 1) | கேள்வி | : | வா.சா.1 – வாதி பெருமாள் சாமி அவருடைய சாட்சியத்தில், வாதியும் எதிரியாகிய ஆகிய நீங்களும் தொழில்முறை பழக்கத்தின் அடிப்படையில் 05.03.2020 ம் தேதி வீடு கட்ட ஒப்பந்தம் பேசி, அதை கடந்த 21.12.2020 ம் தேதி புகார்தாரர் மற்றும் எதிரியாகிய நீங்களும் ஏற்படுத்திக்கொண்ட சம்மத பத்திரத்தில் ரூ.16,50,000/– என பேசியதாகவும், பின்பு அதற்கு ரூ.12,49,000/– யை புகார்தாரர் எதிரியான உங்களுக்கு வங்கி கடன் வாங்க உதவியதாகவும், பாக்கி ரூ.4,01,000/– த்தை ஆறுமாத காலத்தில் தருவதாக எதிரியாகிய நீங்கள் உறுதி அளித்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளாரே? நீர் என்ன சொல்கிறீர்? |
| | பதில் | : | வீடு கட்டுவதற்கு ரூபாய் 16 லட்சத்து 50 ஆயிரத்திற்கு சம்பந்த பத்திரம் எழுதிக் கொண்டது உண்மைதான். ரூபாய் 16 லட்சத்திற்கு கடன் கேட்டதில் ரூபாய் 13 லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்தான் கடன் கிடைத்தது. என்னுடைய வங்கிக் கணக்கு புத்தகம், ஏடிஎம் அட்டை மற்றும் காசோலை புத்தகத்தை பெருமாள் சாமியே வாங்கி வைத்துக் கொண்டார். மேற்படி தொகை ரூபாய் 13 லட்சத்து 50 ஆயிரத்தை அவரே எடுத்துக் கொண்டார். வீடு வாஸ்து செய்யும் போது ரூபாய் இரண்டு லட்சத்து 50 ஆயிரம், வீடு கட்டி முடித்து ஒரு ஆண்டு கழித்ததும் ரூபாய் ஒரு லட்சத்து 50 ஆயிரம் கொடுத்தேன். நான் அவருக்கு மேற்கொண்டு பணம் எதுவும் கொடுக்க வேண்டியதில்லை. என்னுடைய வீட்டில் பாக்கி வேலை இருந்ததால் அதை செய்து கொடுக்குமாறு கேட்டேன், அதற்கு அவர் பணம் கொடுக்க வேண்டி உள்ளது என்று கூறினார். நான் கணக்கு கொடுத்தால் பணம் தருகிறேன் என்று கூறினேன். |
| 2) | கேள்வி | | வா.சா.1 – வாதி பெருமாள் சாமி அவருடைய சாட்சியத்தில், புகார்தாரர் உங்களிடம் புதிய வீட்டை ஒப்படைத்ததாகவும், ஆனால், எதிரியான நீங்கள் சொன்னபடி மீதி பணத்தை தராமல் வீண் காலதாமதம் செய்து வந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளாரே? நீர் என்ன சொல்கிறீர்? |
| | பதில் | | வீடு கட்டி கொடுத்து விட்டார், நான் கொடுக்க வேண்டியிருந்த பாக்கி தொகை ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரத்தை வீடு கட்டி முடித்த பிறகு ஒரு ஆண்டு கழித்து கொடுத்து முடித்து விட்டேன். |
| 3) | கேள்வி | | வா.சா.1 – வாதி பெருமாள் சாமி மேலும் அவருடைய சாட்சியத்தில், புகார்தார் பலமுறை கேட்டதின் அடிப்படையில், எதிரியான நீங்கள் வாதிக்கு கொடுக்க வேண்டிய ரூபாய்.4,01,000/– ஒவ்வொரு மாதத்திற்கு ரூபாய்.1,00,000/– தருவதாக கூறி, ரூபாய்.1,00,000/– கொடுத்து விட்டு மீதி தரவேண்டிய தொகைக்கு எதிரியான நீங்கள் அரசு அனுமதித்த வட்டி தொகையுடன் |

| | | | |
|---|---|---|---|
| | | | தருவதாக கூறி, மேலும் வீடு கட்டும் ஒப்பந்தத்தில் குறிப்பிடாத வேலைகளையும் செய்து தர வேண்டும் என்றும் அதற்குரிய தொகையையும் சேர்த்து தருவதாக உறுதி அளித்ததால், புகார்தாரர் அதை ஏற்றுக்கொண்டு செய்து கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளாரே? நீர் என்ன சொல்கிறீர்? |
| | பதில் | | நான் அவ்வாறு கூறவில்லை, வீடு கட்டி முடித்த பிறகு நான் அவருக்கு ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும் கொடுக்க வேண்டியிருந்தது, அந்த தொகையை ஒரு ஆண்டு கழித்து தருவதாக கூறினேன். |
| 4) | கேள்வி | : | வா.சா.1 – வாதி பெருமாள்சாமி மேலும் அவருடைய சாட்சியத்தில், எதிரியான நீங்கள் பல பொய்யான காரணங்கள் கூறி வீண் காலதாமதம் செய்ததாகவும், பின்பு எதிரியான நீங்கள் புகார்தாரரின் அலுவலகத்தில் சந்தித்து 15.03.2024 ஆம் தேதியில் ரூபாய் 5,00,000/– சாத்தூர் கிளை Axis BANK வங்கியின் காசோலையை (காசோலை எண் 053843) கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளாரே? நீர் என்ன சொல்கிறீர்? |
| | பதில் | : | 2020ம் ஆண்டு நான் வீடு கட்டுவதற்கு ஒப்பந்தம் போட்ட போது அவர்களே ஆக்ஸிஸ் வங்கியில் என்னுடைய வங்கி கணக்கை துவங்கி, அதில் இருந்து கொடுக்கப்பட்ட காசோலை புத்தகத்தை வைத்துக் கொண்டார்கள். ஒவ்வொரு முறையும் காசோலையில் என்னிடம் கையெழுத்து வாங்க முடியாது என்று கூறி மொத்தமாக கையெழுத்து வாங்கினார்கள். இந்த வழக்கு காசோலையில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து தான். வீடு கட்டி முடித்த பிறகு வங்கி கணக்கு புத்தகத்தையும் ஏடிஎம் அட்டையும் மட்டும் என்னிடம் கொடுத்தார்கள், காசோலை புத்தகத்தை கொடுக்கவில்லை. நான் காசோலையில் கையெழுத்து போடும்போது அது எழுதப்பட்டிருந்ததா? என்று எனக்கு தெரியாது, எனக்கு படிக்கத் தெரியாது என்பதால் நான் அதை பார்க்கவில்லை. |
| 5) | கேள்வி | : | வா.சா.1 – வாதி பெருமாள்சாமி மேலும் அவருடைய சாட்சியத்தில், தங்களுடைய காசோலையை வாதி அவர் கணக்கு வைத்துள்ள சாத்தூர் கிளை தமிழ் நாடு மெர்கென்டைல் வங்கியில் வசூலுக்காக 22.04.2024ம் தேதி செலுத்திய போது, 24.04.2024 ம் தேதி "Funds Insufficient" என ரிட்டன் மெமோ கொடுக்கப்பட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளாரே? நீர் என்ன சொல்கிறீர்? |
| | பதில் | : | தெரியாது |
| 6) | கேள்வி | : | வா.சா.1 – வாதி பெருமாள்சாமி மேலும் அவருடைய சாட்சியத்தில், 06.05.2024ம் தேதி எதிரியாகிய உங்களுக்கு மேற்படி காசோலை தொகையை கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், 07.05.2024ம் தேதி அறிவிப்பை பெற்றுக்கொண்டு பல பொய்யான தகவல்களுடன் பதில் அறிவிப்பு அனுப்பியதாகவும் சாட்சியம் அளித்துள்ளாரே? நீர் என்ன சொல்கிறீர்? |
| | பதில் | : | எனக்கு வந்த வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பி விட்டேன். |
| 7) | கேள்வி | : | வா.சா.1 – பெருமாள்சாமி மேலும் அவருடைய சாட்சியத்தில், மேற்படி காசோலை திருப்பப்பட்ட விவரம் தெரிந்தும் இதுநாள் வரை பணம் எதுவும் |

| | | | |
|---|---|---|---|
| | | | தரவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளாரே? நீர் என்ன சொல்கிறீர்? |
| | பதில் | : | பணம் கொடுக்க வேண்டியது இல்லை என்பதால் பணத்தை அதற்குப் பிறகு கொடுக்கவில்லை. |
| 8) | கேள்வி | : | வா.சா.1 – வாதி பெருமாள்சாமி மேலும் அவருடைய சாட்சியத்தில், தங்களுடைய வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று தெரிந்தும், மேற்படி காசோலையை கொடுத்து வாதியை ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் செயல்பட்டதாகவும் கூறி, நீங்கள் மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 கீழான குற்றச்செயலை செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளாரே? நீர் என்ன சொல்கிறீர்? |
| | பதில் | : | பொய் வழக்கு |
| 9) | கேள்வி | : | இவ்வழக்கு குறித்து நீர் வேறு ஏதேனும் கூற வேண்டுமா? |
| | பதில் | : | பொய் வழக்கு |
| 10 | கேள்வி | : | வழக்கை சமரசமாக முடித்துக் கொள்ள விரும்புகின்றீர்களா? |
| | பதில் | : | நான் பணம் கொடுக்க வேண்டியது இல்லை என்பதால் பணம் கொடுத்து சமரசமாக முடிக்க விரும்பவில்லை. |
| 11 | கேள்வி | : | உமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா? |
| | பதில் | : | உண்டு |

மேற்படி கேள்விகள் என்னால் நேரடியாக எதிரியிடம் கேட்கப்பட்டு, அவர் கூறிய பதில்கள் என்னால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.